# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 194/2010

Deposition of witness for: PW -3

| | | | |
|---|---|---|---|
| Name | : அப்துல் லத்தீப் | Father/Husband Name | : ராஜாக்கிளி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 06.11.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 6th day of 2024.

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது)

முதல் விசாரணை:

நான் சொக்கலிங்கபுரத்தில் குடியிருந்து சந்தை வியாபாரம் பார்த்து வருகிறேன். அசா 1, அசா 2 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கில் வாகன விபத்தில் இறந்து போன செல்லையாவை எனக்கு தெரியும். அவர் எனக்கு ஆசிரியராக இருந்தார், அவர் நடைபயிற்சி சென்றபோது 08.01.2010ல் மாலை 5.30 மணியளவில் நான் சொக்கலிங்கபுரத்தில் கடைவீதியில் இருந்த போது செல்லையா விபத்து ஏற்பட்டு, 108 ஆம்புலன்சில் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள், கடைவீதியில் அனைவரும் அதை கூறினார்கள், நாங்கள் அதை கேள்விபட்டு சிங்கம்புணரி மருத்துவமனைக்கு எனது இருசக்கர வாகனத்தில் அசா.2 உடன் சென்றேன். அதே போல் அசா.1 சாட்சி அப்துல் லத்திப் சாட்சி சண்முகம் ஆகியோர்கள் சம்பவத்தினை கேள்விபட்டு சிங்கம்புணரி மருத்துவமனைக்கு வந்து விட்டார்கள். அங்கு செல்லையாவிற்கு சிசிக்சை அளிக்க முடியாது என்று கூறி ஆம்புலன்சில் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள், அந்த ஆம்புலன்சில் அசா1, அசா2, சண்முகம் ஆகியோருடன் நானும் சென்றேன். சொக்கலிங்கபுரத்திற்கு 1/2 கிலோ மீட்டர் முன்பு இடையே பைக்கில் சென்றவர், நடந்து சென்ற செல்லையாவினை மோதிவிட்டு சென்றதாக சொன்னார்கள்.

செல்லையாவிற்கு அந்த விபத்தில் தலையில் அடிபட்டு இருந்தது. யார் மோதினார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு கொண்டு சென்ற உடனே செல்லையா இறந்து விட்டதாக மருத்துவர்கள் சொல்லி விட்டார்கள். புகாரினை அசா.1 தான் காவல்நிலையத்தில் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலீசார் என்னை சம்பவத்தினை பின்னிட்டு எத்தனை ஆண்டுகள் கழித்து விசாரித்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் தற்போது கூறியதைதான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மற்ற சாட்சிகளை போலீசார் விசாரித்த விசயம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.